padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

26

# 'சிங்களம் மட்டும் சட்டம்' அதன் தோற்றமும் வரலாறும்

சேர். ஜோன் கொத்தலாவலை சோல்பரிப் பிரபுவின் மீது தனிப்பட்ட முறையில் வெறுப்புக் கொண்டிருந்தாலும், பிரித்தானிய அரசுக்கு மிகவும் விசுவாசமானவராகவே இருந்தார். குறிப்பாக தன்னை மேற்குலக நலன் விரும்பும் மனிதராகவும், முதலாளித்துவ அணியைச் சார்ந்தவராகவும் காட்டிக் கொள்வதில் அவர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்.

புகழ் பெற்ற 'பாண்டுங்' சர்வதேச மகாநாட்டுக்குச் சென்ற அவர், அங்கு வந்திருந்த சீனத் பிரதமர் செள.என்.லாயை சீண்டும் விதத்தில் சீனாவை மேற்கோள்காட்டி கம்யூனிச விரோத சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். ஆனால் செள. என். லாய் அதைக் கண்டுகொள்ளவில்லை. 'நான் இங்கு சச்சரவில் ஈடுபடவரவில்லை' என்று கூறியதன் மூலம் சேர்.ஜோனின் முகத்தில் கரி பூசிவிட்டார்.

சேர்.ஜோன் கொத்தலாவலை தொடர்ந்து; கம்யூனிச நாடு என்ற ஒரே காரணத்திற்காக சோவியத் யூனியனைச் சேர்ந்த உதை பந்தாட்டக் கோஷ்டி ஒன்றுக்கும், சூரிய கிரகணத்தை அவதானிப்பதற்காக இலங்கைக்கு வரவிரும்பிய விஞ்ஞானிகள் குழு ஒன்றுக்கும் விசா வழங்க மறுத்து விட்டார்.



அவர் இவ்வாறு கம்யூனிச எதிர்ப்பு ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்த போது தென் இலங்கையில் ஏற்கனவே ஆழமாக வேர்விட்டிருந்த பௌத்த சிங்கள இனவாதம், இடதுசாரிகளின் போராட்டங்களினாலும், வளர்ச்சியாலும் ஏற்பட்ட பாதிப்புக்களை தகர்த்துக் கொண்டு மறுபடியும் துளிர்விட்டுத் தழைக்க ஆரம்பித்தது.

இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சேர்.ஜோன் கொத்தலாவலை தீவுப்பகுதியில் மாலை மரியாதை மேள தாளங்களோடு முடியும் சூட்டப்பட்டதைக் கண்டு மெய்சிலிர்த்துப்போய்...

'நான் உயிரோடு இருக்கும் வரை தமிழ் மக்கள் மீது எவரையும் ஆதிக்கம் செலுத்த விடமாட்டேன். மற்றெல்லோருக்கும் சொந்தமாக இருப்பதுபோலவே இந்த நாடு தமிழருக்கும் சொந்தமானதாகும். பருத்தித்துறையிலிருந்து காலிவரை இன, மத பேதமற்ற ஒரு நாடாகக் கருதுவதே எனது இலட்சியமாகும். தமிழும் சிங்களமும் சரி நிகர் சமானமுடையவை அவை இரண்டையும் இந்நாட்டு ஆட்சிமொழியாக்குவதற்கு விரைவில் சட்டத்தை நான் திருத்தம் செய்வேன்' என்று பேசினார்.

இது தெற்கிலிருந்த பௌத்த சிங்கள இனவாதிகளை உசுப்பிவிட்டுவிட்டது. பிரதமர் சேர். ஜோன், கொத்தலாவலை தலைமையிலான ஐ.தே.கட்சி ஆட்சியை விழுத்துவதற்கு தருணம் பார்த்திருந்த S.W.R.D. பண்டாரநாயக்கா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக்கட்சி தாங்கள் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்திற்குள் சிங்களத்தை ஆட்சிமொழியாக்குவோம் என்று அறிவித்தது. பதிலுக்கு ஐக்கிய தேசியக்கட்சியும் களனி மகாநாட்டை நடத்தி சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. டி.சி.டபிள்யூ. கன்னங்கர என்பவரால் கொண்டுவரப்பட்ட இத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா பெரிதும் ஆதரவு வழங்கினார்.

ஐ.தே.. கட்சியின் இந்தக் களனி மகாநாட்டுத் தீர்மானத்தையடுத்து அக்கட்சியிலிருந்த பல தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள் அதிருப்தியடைந்தனர். 20.01.1956—ல் ஐ.தே.கட்சி அரசில் மந்திரியாக இருந்த எஸ்.நடேசன் உட்பட, எஸ்.எம்.இராஜமாணிக்கம், எம். ஈ.எச் முகமது அலி, வி.குமாரசாமி, ஏ.எம். மொர்சா, ஏ.எல் தம்பியையா, ஆர்.பி.கதிர்காமர், வி.நல்லையா முதலானோர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் வெளியேறினார்கள்.

தமிழர் தேசிய சங்கத்தின் தலைவராக இருந்து பின்னர் டி.எஸ்.சேனநாயக்காவின் வேண்டுகோளின் பேரில் ஐ.தே கட்சியில் சேர்ந்து கொண்ட செனட்டர் எஸ்.ஆர்.கனகநாயகமும் அக் கட்சியிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த சிங்களம் மட்டும் சட்டம் பற்றிய முன்னறிவித்தல் வெறும் கோசம் என்ற அடிப்படையில் இருந்த காலத்திலேயே அனைத்து இடதுசாரிகளும், தமிழர் பிரதிநிதிகளும், பல முஸ்லீம் தலைவர்களும் எதிர்த்த போது அகில இலங்கை முஸ்லீம் லீக்கும், அகில இலங்கை சோனகர் சங்கமும் ஆதரித்தது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

இந்த ஆதரவுக்கான காரணம் பற்றி மூதூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர். ஏ.எம். அபூபக்கர் கருத்து வெளியிடுகையில் 'கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் முஸ்லீம்கள் அனைவரும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுவதாக கூறப்படுவது சரியல்ல. பெரும்பாலான முஸ்லீம்கள் சிங்களத்தையே அரசகருமமொழியாக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்' என்று கூறினார்.

இவ்வாறு, சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற கோசத்துக்கு எதிர்ப்பும் ஆதரவும் இருந்து கொண்டிருந்தபோது 1955—ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் லங்கா சமசமாஜக் கட்சி தமிழும் சிங்களமும் இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது.

இந்தத் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய என்.எம்.பெரேரா, தமிழர்களை நிர்ப்பந்தித்தால் தனி நாடு கோரவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும் என்றும் தனிச் சிங்களச் சட்டம் என்பது இலங்கைத் தேசத்தை உருவாக்காது மாறாக சிங்களவர் தேசத்தையே உருவாக்கும் என்று கூறினார்.

நான் உயிரோடு இருக்கும் வரை தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த யாரையும் அனுமதிக்கமாட்டேன் என்று யாழ்ப்பாணத்தில் கூறிய சேர்.ஜோன். கொத்தலாவலை 1956-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்த்து கொடுப்பதென்பது முடியாத காரியம் என்றும் அவ்வாறு கொடுத்தால் அதுசிங்கள இனத்தை அழிவுக்குக் கொண்டு போய்விடும் என்று கூறி, தனது இனவர்க்க சாயத்தை நிருபித்துக் கொண்டார்.

எஸ். நடேசன்,
சி. சுந்தரலிங்கம்,
ஜி.ஜி.பொன்னம்பலம்
ஆகியோர் ஒன்று
சேர்ந்து தமிழர்
மகாசபை என்ற ஒரு
அமைப்பை உருவாக்கி
'தமிழருக்கு சம
உரிமை
கொடுக்காவிட்டால்'
தனிநாட்டுக்கான
பிரிவினைப் போரை
ஆரம்பிக்க
இருப்பதாக
தெரிவித்தனர்.



'சிங்களம் மட்டும்' கோரிக்கையும், தமிழர்களுக்கு எதிரான இனவாத கருத்துக்களும் தென் இலங்கையில் உச்சக் கட்டத்தில் இருந்த காலகட்டத்தில் தமது கட்சி சிங்களத்தை ஆட்சிமொழியாக்குவது என்று தீர்மானித்திருந்ததால், தமக்கு பெரிய வெற்றி கிடைக்கும் என்று நினைத்து உரிய காலத்துக்கு முன்பே சேர். ஜோன். கொத்தலாவலை பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

1956—ல் நடைபெற்ற இந்தத் தேர்தல், ஆங்கிலத்தின் இடத்தில் எதை வைப்பது சிங்களத்தையா அல்லது சிங்களத்தையும் தமிழையுமா? என்ற கேள்விக்குரிய பதிலை தீர்மானிக்கும் தேர்தலாக இருந்தது.

இத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக்கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், பிலிப் குணவர்த்தனாவின் புரட்சிவாத சமசமாஜக் கட்சியும் விப்லவகாரி சமசமாஜக்கட்சியும், 'சிங்களம் மட்டும்' என்ற கோசத்தை முன்வைத்துப் போட்டியிட்டன, லங்கா சமஜமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களமும், தமிழும் என்ற கோசத்தை முன்வைத்துப் போட்டியிட்டன.

1956 தேர்தலுக்கு முன்பு நடந்த மற்றொரு சம்பவமும் முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஐக்கிய தேசியக் கட்சி சிங்களம் மட்டும் தீர்மானத்தை முன்வைத்த போது சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராகவும் ஐக்கிய தேசியக்கட்சி அரசில் உதவி அமைச்சராகவும் இருந்த வி. குமாரசாமி, 19.01.1956—ல் நடைபெற்ற ஐ.தே.கட்சி செயற்குழுக் கூட்டத்தில் தமிழர்களுக்கு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

எஸ். நடேசன், சி. சுந்தரலிங்கம், ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோர் ஒன்று சேர்ந்து தமிழர் மகாசபை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி 'தமிழருக்கு சம உரிமை கொடுக்காவிட்டால்' தனிநாட்டுக்கான பிரிவினைப் போரை ஆரம்பிக்க இருப்பதாக தெரிவித்தனர்.

அதுபோல் அகில இலங்கை தமிழர் மகாசபையின் சார்பில் 1956—ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்ட ஜி.ஜி பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம், எஸ். நடேசன், மு.சிவசிதம்பரம், ஏ. எஸ்.ராஜசிங்கம், சி.அருளம்பலம் ஏ.எஸ்.தம்பையா, வி.குமாரசாமி, .சி.சிற்றம்பலம் ஆகியோர் தேர்தல் நடந்து முடிந்து புதிய பாராளுமன்றம் கூடி, ஆறு மாதகாலத்துக்குள் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்த்தும், மலையகத் தமிழருக்கு பிரசா உரிமையும் வழங்காவிட்டால், தாம் அனைவரும் தமது பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு தனித் தமிழ் நாட்டுக்கான போராட்டத்தை ஆரம்பிக்க இருப்பதாக அறிவித்தனர்.

– நக்கீரன்

படிப்பகம்